# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2021

**2021**-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி **அ..சா.23** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அசோக்ராஜ் | வயது | |
| தகப்பனார் பெயர் | சந்திரசேகர் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருவாரூர் வேலங்குடியில் வசித்து வந்து எலக்ரிஷயன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி 1 சக்திவேல் மற்றும் 2வது எதிரி கோவிந்தலெட்சுமியை எனக்கு தெரியும். எனது அப்பாவின் மூலம் ஆஜர்1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் 1வது எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து ரூ. 1 லட்சம் ரொக்கமாக கோர்ட்டில் வேலை வாங்கி தருவதற்காக கொடுத்தேன். நான் பணம் கொடுத்த பிறகு இரண்டு, மூன்று மாதங்களுக்கு பிறகு போய் கேட்டு பார்த்தேன். அதன்பிறகு கோர்ட்டில் கேஸ் ஆகிவிட்டதாக கூறிவிட்டார்கள். நான் சக்திவேல், கோவிந்தலெட்சுமியிடம் பணம் கொடுத்ததற்கு குற்றபிரிவு மாவட்ட காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் மூலம் தகவல் கூறினார்கள். நான் வெளியூரில் இருந்ததால் போலிசார் என்னை போன் மூலமே விசாரணை செய்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் 10 ம் வகுப்பு படித்து பெயிலாகிவிட்டேன். ஆஜர் எதிரிகளை என் அப்பா மூலம் தெரியும். அவர்கள் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக சக்திவேலும், கோவிந்தலெட்சுமியும் கூறினார்கள். என் படிப்பிற்கு என்ன வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள் என்றால் நீதிமன்றத்தில் கட்டு எடுத்து கொடுக்கும் வேலை வாங்கி தருவதாக கூறினார்கள். வாய்வார்த்தையாக பணிக்கு ஆள் சேர்ப்பார்கள் என்று இரண்டு எதிரிகளுமே கூறினார்கள். வேலை வாங்கி தருவது சம்பந்தமாக வேறு யாரிடமும்

விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை. நான் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை. வழக்கு நிலுவையில் இருப்பதாக யார் சொல்லி தெரிந்துக்கொண்டேன் என்றால் குற்றவியல் போலிசார் சொல்லி தெரிந்துக்கொண்டேன். என்ன வழக்கு என்று தெரிந்துக்கொண்டேன் என்றால் தெரிந்துக்கொள்ளவில்லை. கைப்பட மனு எதுவும் எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. 1வது எதிரி 2 வது எதிரி மீது பணம் வாங்கி கொண்டு ஏமாற்றி விட்டதாக வழக்கு கொடுத்துள்ளார் என்ற விபரத்தை நான் தெரிந்துக்கொள்ளவில்லை. நான் பணம் கொடுக்கும்போது 1வது எதிரி சக்திவேலும், 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியும் இருந்தார்கள். எனக்கு வேலை கிடைக்காததால் நான் 1வது எதிரி சக்திவேலிடம் சென்று பணம் கேட்டேன். அவர் என்னிடம் பணத்தை கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துவிட்டதாக கூறினார். பணம் 1வது எதிரி சக்திவேலிடம் இல்லை என்பதை தெரிந்துக்கொண்டேன். அதன்பிறகு 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பணம் கேட்டேனா என்றால் 1வது எதிரி கோவிந்தலெட்சமி மீது வழக்கு தொடுத்திருப்பதாக என்னிடம் கூறினார். 2 வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதாக தெரிந்துக்கொண்டேன். அவர் எந்த நீதிமன்றத்தில் வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது- நான் தற்போது கூறியதை போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

நான் போலிசார் விசாரணையில் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியாது என்று கூறியுள்ளேனா என்றால் எனக்கு தெரியும் என்று கூறியுள்ளேன். இதுநாள் வரையில் நான் 1வது எதிரி சக்திவேலிடம் தொகையை திருப்பி தருமாறு கேட்டேன். அவர் கேஸாகிவிட்டதால் கோர்ட் மூலமாக வாங்கி தருவதாக கூறியுள்ளார். இந்நாள் வரை நான் 1வது எதிரியிடம் நெருக்கமாக இருப்பதால் தான் அவர் கொடுத்த பணம் கிடைக்கும் என ஆசை வார்த்தை காண்பித்ததாலும், நான் முதல் விசாரணையில் 2 வது எதிரியை தெரியும் என்றும், மற்றும் 1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது 2 வது எதிரியை தெரியும் என்றும் நான் பணம் கொடுக்கும்போது 1வது எதிரி சக்திவேலும், 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியும் இருந்தார்கள் என்றும், அவர் என்னிடம் பணத்தை கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துவிட்டதாக கூறினார் என்றும், பணம் 1வது எதிரி சக்திவேலிடம் இல்லை என்பதை தெரிந்துக்கொண்டேன் என்றும், 2 வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதாக தெரிந்துக்கொண்டேன் என்றும், நீதிமன்றத்தில் கட்டு எடுத்து கொடுக்கும் வேலை வாங்கி தருவதாக கூறினார்கள் என்றும் வழக்கிற்காக போலிசார் விசாரணையில் இருந்து மாறுபட்டு முதல்முறையாக மேற்கண்ட சங்கதிகள் அனைத்தும் 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.25/2021

**2021**-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி **அ..சா.24** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசீலன் | வயது | |
| தகப்பனார் பெயர் | தங்கராஜ் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் டெலிகாமில் டிரைவர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் 1வது எதிரி சக்திவேல் என்பவரை தெரியும். 1வது எதிரி சக்திவேல் நீதிமன்றத்தில் டிரைவர் வேலை வாங்கி வருவதாக கூறினார். 2018 ம் வருடம் பிப்ரவரி மாதம் 1வது எதிரி சக்திவேலிடம் வேலை வாங்கி தருவதற்காக ரூ.1 லட்சம் ரொக்கமாக அவரது வீட்டில் வைத்து கொடுத்தேன். அதன்பிறகு இந்த டிப்பார்ட்மெண்டில் வேலை கிடைக்கவில்லை என்றால் வேறு டிப்பார்ட்மெண்ட் பார்ப்பமோ என்றார்,அதற்கு சரி என்று கூறினார். அதன்பிறகு வேலை கிடைக்கவில்லை என்பதால் இரண்டு, மூன்று முறை போன் செய்து பார்த்தேன். அவர் எடுக்கவில்லை. ஆதலால் 4, 5 முறை நேரில் சென்று பார்த்தேன். கேஸாகி இருப்பதால் நான் பணம் வாங்கி தருகிறேன் என்று கூறினார். டி.சி.பி. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். மொத்தமாக எல்லோரும் கேஸ் போட்டுவிட்டார்கள் என்று 1வது எதிரி சக்திவேல் சொன்னார். நான் மேலே சொன்ன விபரத்தைதான் போலிசார் விசாரணையிலும் கூறினேன்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

போலிசார் என்னை 2019 ம் ஆண்டு விசாரணை செய்தார்கள். நான் விசாரணையின்போது திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிக்கு வந்தேன். வேறு ஒருவர் புகார்

கொடுத்து அதை விசாரிப்பதற்காக என்னையும் கூப்பிட்டார்கள். நான் தனியாக எந்த புகாரும் கொடுக்கவில்லை. 2019 ம் ஆண்டு காவல் நிலையத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் என் வீட்டில் வாங்கியிருப்பார்கள். காவல் நிலையத்தில் நான் சக்திவேலை மட்டும் தெரியும் என்றும் கோவிந்தலெட்சுமியை தெரியாது என்றும் கூறியுள்ளேன். 2 வது எதிரியை நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். 1வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. 1வது எதிரியிடம் பணம் கொடுக்கும்போது நான், என் அப்பா மற்றும் என் அக்காவின் கணவர் ஆகியோர் சென்றோம். என் அக்கா வீட்டுக்காரர் பெயர் கணேசன். என் மாமா பெயர் டாக்டர் ராஜமாணிக்கம். என் மாமா ராஜமாணிக்கம்தான் வேலை வாங்கி தருவது தொடர்பாக 1 மற்றும் 2 எதிரிகளிடம் அடிக்கடி பேசினார் என்றும், அவர்களை பார்த்துள்ளார் என்றும் சொன்னால் 1வது எதிரி சக்திவேலிடம் பேசியதை மட்டும் என்னிடம் கூறினார். 2 வது எதிரி கோவிந்தலெட்சுமிதான் எனது மாமா ராஜமாணிக்கத்திடம் நீதிமன்றத்தில் டிரைவர் வேலை காலியாக இருப்பதாக கூறினார் என்றாலும், அதனடிப்படையில்தான் இருவரிடமும் பணம் என் மாமா ராஜமாணிக்கம் இருக்கும்போது கொடுத்தோம் என்றால் சரியல்ல. என் மாமா ராஜமாணிக்கம் போன் மூலம் பணம் கொண்டுபோய் கொடுங்கள் என்றும் கூறியதால்தான் பணம் கொண்டுபோய் கொடுத்தோம். நானும், என் அப்பாவும் பலமுறை 1வது எதிரி சக்திவேலிடம் சென்று பணம் கேட்டோம். நான் ஒரு மேடமிடம் பணத்தை கொடுத்துள்ளேன், வாங்கி தருகிறேன் என்று கூறினார் , அவர் பெயரை என்னிடம் கூறவில்லை. அந்த மேடம் 1வது எதிரி வீட்டில்தான் குடியிருந்தார் என்று நான் தெரிந்துக்கொள்ளவில்லை. சக்திவேல் பணம் கொடுத்து ஏமாந்த விஷயம் நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் நான் தெரிந்துக்கொண்டேன். அதன் தொடர்பாக அவர் புகார் கொடுத்துள்ளார் என்ற விபரமும் தெரிந்துக்கொண்டேன். நான் இந்த விஷயத்தை போலிசாரிடம் சொல்லியுள்ளேன்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

நான் 1வது எதிரி சக்திவேலிடம் கேட்டுக்கொண்டேதான் இருக்கிறேன். அவர் பணம் தருவதாக கூறியுள்ளார். அவர் பணம் தருவதாக கூறி ஆசை வார்த்தை காண்பித்து வருவதால்தான்

1வது எதிரி ஒரு மேடமிடம் பணத்தை கொடுத்துள்ளார் என்றும், அதை வாங்கி தருவதாக கூறினார் என்றும், அவர் பெயரை என்னிடம் கூறவில்லை என்றும், அந்த மேடம் 1வது

எதிரி வீட்டில்தான் குடியிருந்தார் என்று நான் தெரிந்துக்கொள்ளவில்லை என்றும், சக்திவேல் பணம் கொடுத்து ஏமாந்த விஷயம் நான் தெரிந்துக்கொண்டேன் என்றும், அதன் தொடர்பாக அவர் புகார் கொடுத்துள்ளார் என்ற விபரமும் தெரிந்துக்கொண்டேன் என்றும், பல புதிய சங்கதிகளை போலிசார் விசாரணையில் கூறாமல் முதன்முறையாக நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

## CC No.25/2021

**2021**-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி **அ.சா.25** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | யோகலெட்சுமி | வயது | |
| தகப்பனார் பெயர் | | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருவாரூர், மடப்புரம் மூடுக்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் 1வது எதிரி சக்திவேலை தெரியும். என் அப்பா மூலமாக எனக்கு தெரியும். 1வது எதிரி கோர்ட்டில்வேலை வாங்கி தருவதாக கூறினார். ஒருவர் கோர்ட்டில் இருக்கிறார் அவர் மூலம் வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி கூறினார். ஜனவரி 2018-ல் ரூ.1 லட்சம் ரொக்கமாக 1வது எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து கொடுத்தோம். பணம் கொடுக்கும்போது நானும், என் அப்பாவும் சென்றிருந்தோம். பணம் கொடுத்து நாளாகியும், வேலை கிடைக்கவில்லை. செப்டம்பர் மாதம் எனது சகோதரியின் திருமணத்திற்காக பணத்தைதான் 1வது எதிரியிடம் கொடுத்திருந்தோம். ஆதலால் செப்டம்பர் மாதம் 1வது எதிரியிடம் என் சகோதரியின் பத்திரிக்கை கொடுத்துவிட்டு பணத்தை கேட்விட்டு வந்தோம். செப்டம்பர் 10 ம் தேதி என் சகோதரியின் திருமணம் இருந்தது.அதற்கு முன்பாகவே பணத்தை கொடுத்துவிட்டார். டி.எஸ்.பி. ஆபீஸிலிருந்து போலிசார் வந்து என்னை வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

2014 ம் ஆண்டு எனக்கு திருமணம் ஆனது. நான் பி.காம்., வரை படித்துள்ளேன். நான் வேலைக்கு போகவேண்டும் என்ற ஆசை என்அப்பாவிற்கு

வந்தது. நான் 1வது எதிரியிடம் பணம் கொடுக்கும்போது என் அப்பாவுடன் சென்றேன். நான் போலிசார் விசாரணையில் என் கணவருடம் சென்று பணம் கொடுத்திருப்பதாக சொல்லியிருந்தால் சரியல்ல. என் அப்பாவிற்கு எதிரிகளை தெரியுயமா என்றால் 1வது எதிரி சக்திவேலை தெரியும். என் அப்பா ஈ.பி.-யில் பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ளார். நாங்களும், 1வது எதிரியும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள். என் அப்பா எப்படி வேலை கிடைக்கும் நன்கு விசாரணை செய்துள்ளார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு 1வது எதிரி சக்திவேல் நீதிமன்றத்தில் பணிபுரியவில்லை என்ற விபரம் தெரியும், ஆனால் நீதிமன்றத்தில் பணிபுரியும் ஒரு நபர் தெரியும், அவர் மூலம் வேலை வாங்கி கொடுப்பதாக 1வது எதிரி சக்திவேல் கூறினார். 1வது எதிரி என் அப்பாவிடம் பொய் சொல்ல வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். நாங்கள் பணம் கொடுக்கும்போது நான், என் அப்பா, சக்திவேல் மட்டும் இருந்தோம். நாங்கள் மாலை நேரத்தில் பணம் கொடுத்தோம். நேரம் ஞாபகம் இல்லை. 21ம் தேதி ஜனவரி மாதம் 2018 அன்று கொடுத்தோம். நாங்கள் பணம் கொடுக்கும்போது வேலை வாங்கி தருவதாக கூறினார். நாங்கள் செப்டம்பர் 1வது எதிரியிடம் பணம் கேட்டோம். என் சகோதரியின் திருமணத்திற்காக பணம் தேவை பட்டதால் வேலை வேண்டாம் என்று கூறி பணத்தை கேட்டோம். பணம் திரும்ப வாங்கபோன போது 1வது எதிரி சக்திவேல் என் அப்பாவை சிறிது நேரம் காத்திருங்கள் என்று கூறிவிட்டு வெளியே சென்றார். எங்கு சென்றதாக என் அப்பாவிடம் கூறவில்லை. 1வது எதிரி என் அப்பா இருக்கும்போதே 2 வது எதிரியிடம் போன் மூலம் தெடர்பு கொண்டு என் அப்பா பணத்திற்காக வந்த விபரத்தை கூறினார் என்றும், 2 வது எதிரி பணி செய்த வீட்டில் வந்து பணம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறியதால், 1வது எதிரி என் அப்பாவை காக்க வைத்துவிட்டு 2 வது எதிரி வரச்சொன்ன வீட்டிற்கு சென்று பணம் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார். அவர் எவ்வளவு பணம் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார் என்றால் ரூ.80 ஆயிரம் கொடுத்தார். நாங்கள்கொடுத்த பணத்தை இரண்டு இன்சால்மெண்டாக கொடுத்தார். ரூ.20 ஆயிரத்தை 1வது எதிரி என் அப்பாவிற்கு போன் மூலம் தகவல்சொல்லி என்அப்பா போய் வாங்கிக்கொண்டு வந்தார். இந்த விஷயத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பணம்கொடுத்ததையும், பணம் பெற்றுக்கொண்டதை மட்டும்தான் போலிசார் விசாணையில் சொல்லியுள்ளேன். நான் புகார் எதுவும் தனியாக கொடுக்கவில்லை.

குு.வி. (2 வது எதிரி தரப்பில்)

நீதிமன்றத்தில் பணிபுரியும் ஒருவர் மூலம்தான் சக்திவேல் வேலை வாங்கி தருவதாக கூறினார் என்று போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் கூறியுள்ளேன். வழக்கிற்காகவும், 1வது எதிரி சக்திவேல் எங்கள் சமூகத்தை சார்ந்தவர் என்பதாலும், மேற்கண்ட விபரத்தை முதன்முறையாக நீதிமன்ற முதல் விசாரணையிலும், 1வது எதிரிதரப்பில் குறுக்குவிசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. போலிசார்விசாரணையில் நானும், என் அப்பாவும் சென்று பணம் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால்சரிதான். போலிசார் விசாரணையில் 1வது எதிரி சக்திவேல் யாரிடம் பணம் கொடுத்ததாக குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் என் தந்தையிடம் கொடுத்ததாக கூறியுள்ளேன். நான் 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளான 1வது எதிரி என் அப்பா இருக்கும்போதே 2 வது எதிரியிடம் போன் மூலம் தொடர்பு கொண்டு என் அப்பா பணத்திற்காக வந்த விபரத்தை கூறினார் என்றும், 2 வது எதிரி பணி செய்த வீட்டில் வந்து பணம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறியதால், 1வது எதிரி என் அப்பாவை காக்க வைத்துவிட்டு 2 வது எதிரி வரச்சொன்ன வீட்டிற்கு சென்று பணம் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார் என்றும், அவர் எவ்வளவு பணம் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார் என்றால் ரூ.80 ஆயிரம் கொடுத்தார் என்றும், நாங்கள்கொடுத்த பணத்தை இரண்டு இன்சால்மெண்டாக கொடுத்தார் என்றும், ரூ.20 ஆயிரத்தை 1வது எதிரி என் அப்பாவிற்கு போன் மூலம் தகவல்சொல்லி என்அப்பா போய் வாங்கிக்கொண்டு வந்தார் என்றும் கூறியுள்ள விஷயங்கள் அனைத்தும் எனக்கு நேரிடியாக தெரியாது என்றால் சரிதான். என் தந்தையும், 1வது எதிரியும் விஷ்வகர்மா சங்கத்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். அதன் காரணமாகத்தான் சங்கத்தின் மூலமாக என் தந்தையை சரிகட்டு 2வது எதிரியை சம்பந்தப்படுத்தி மேற்கண்ட அனைத்து சங்கதிகளையும் முதன்முறையாக நீதிமன்றத்தில் முன்வைத்து சாட்சியமளிக்க தூண்டிவிட்டார் என்றால் சரியல்ல.

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.25/2021

**2021**-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி **அ..சா.26** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அனந்தநாயகி | வயது | |
| கணவர் பெயர் | வேணுகோபால் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருவாரூர் சுப்பமாள் நகரில் குடியிருந்து குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். நேரில் பார்த்துள்ளேன். என் மகன் வேலைக்காக 1வது எதிரி சக்திவேலிடம் ரூ.1 லட்சம் ரொக்கமாக எங்கள் வீட்டில் வைத்து கொடுத்தோம். என் மகனுக்கு காது கேட்காது. எம்.சி.ஏ., படித்துள்ளார். கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக கூறி எங்களிடம் பணம் வாங்கினார். கோர்ட்டில் கம்யூட்டர் லைனில் ஏதாவது வேலை வாங்கி தருவதாக கூறினார். நாங்கள் நிறையமுறை அலைந்து பார்த்துவிட்டோம். ஆனால் அவர் வேலை வாங்கி தரவில்லை. தற்போது எனது கணவரும் இறந்துவிட்டார். வேலை வாங்கி தரும்படி அலைந்தோம். பணத்தை கடன் வாங்கிதான் கொடுத்தேன். வேலை வாங்கி கொடுப்பதாக கூறினார். வேலை கிடைக்கவில்லை என்றால் அந்த பணத்தை வட்டி போட்டு தருவதாக கூறினார். அடிக்கடி என் தம்பி, என் வீட்டுக்காரரர் சென்று கேட்பார்கள். அவர் பணம் வந்தவுடன் தருவதாகவும் கூறினார். வேலை பற்றி எதுவும் கூறவில்லை. நாங்கள் டி.சி.பி. ஆபீஸில் கம்ளையுண்டு கொடுத்தோம். போலிசார் எங்களை வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

என் மகனுக்கு காது கேட்காது என்றால் சரிதான். உடல் ஊனமுற்றோர் கோட்டாவில் வேலை வாங்கி தருவதாகவும் கூறினார். ஆஜர் எதிரிகள் சக்திவேல்

மற்றும் கோவிந்தலெட்சுமியை நான் நேரில் பார்த்திருக்கிறேன். 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதால் வேலை கிடைக்கும் என்று நம்பி பணம் கொடுத்தோம் என்றால் 1வது எதிரி பணம் கேட்டார், பணம் கொடுத்தோம். 1வது எதிரி எங்களுக்கு நல்ல நண்பர். 1வது எதிரி சக்திவேல் நீதிமன்றத்தில் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். வேறு எந்த அரசு துறையிலும் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி அரசு துறையில்வேலை செய்யாதபோது அவரை எவ்வாறு நம்பி பணம் கொடுத்தேன் என்றால் அவர் எங்களுக்கு நன்கு பழக்கம் ஆனவார் என்பதால் நம்பி பணம் கொடுத்தோம்.அவருக்கு வேண்டப்பட்டவர்கள் வேலையில் இருக்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் பணம் கேட்டபோது வரட்டும் பணம் தருகிறேன் என்று கூறினார். எங்கிருந்து வருவதாக கூறவில்லை. 1வது எதிரி பணம் கொடுத்த ஏமாந்த விபரம் எனக்கு தெரியாது. இருவர் பேரிலும் மோசடி வழக்கு இருப்பதாக எனக்கு தெரியாது. அந்த வழக்கு என்ன மோசடி வழக்கு என்ற விபரம் என்று எனக்கு தெரியாது. எனக்கு 2வது எதிரியை எனக்கு நன்கு தெரியும், அதை மறைத்து கூறுகிறேன் என்றால்சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

போலிசார் விசாரணையின்போது 2வது எதிரிகோவிந்தலெட்சுமியை எனக்குதெரியாது என்று கூறிவிட்டு 1வது எதிரி எங்கள்குடும்பத்திற்கு நல்ல நண்பர் என்பதால் 2வது எதிரியை தெரியும்என நீதிமன்றத்தில்முதன் முறையாக கூறிபொய் சாட்சியமளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி** - **1** - 1வது எதிரியும், 2வது எதிரியும் நேரில்பார்த்ததாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன்.அவர்களை எங்கு எப்போது பார்த்தீர்கள்?

நாங்கள் சக்திவேல் வீட்டிற்கு சென்றபோது சக்திவேலின் அம்மா மற்றும் அவரும் இருந்தார்கள். அப்போது 1வது எதிரி சக்திவேல் சென்று தங்கள் வீட்டில் பின்னாடி குடியிருக்கும் கோவிந்தலெட்சுமியை அழைத்து வந்து காண்பித்தார்.

**நீதிமன்ற கேள்வி**- **2** - கோவிந்தலெட்சுமியை அழைத்து வந்து 1வது எதிரி என்ன கூறினார்?

பணம் கோவிந்தலெட்சுமியை காண்பித்துஇவர்களிடம்தான் கொடுத்துள்ளேன், நானும், இவரும் சேர்ந்துதான் வேலை வாங்கி தருகிறேன் என்று கூறினார். ஒருமுறைதான் கோவிந்தலெட்சுமிஎன்பவரை பார்த்தேன்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

நான் போலிசார் விசாரணையில் 2 வது எதிரியை நேரடியாக 1வது எதிரியின் குடும்பத்தாருடன் பார்த்தேன் என்று கூறவில்லை. நான் அவருடைய வயது, அங்கஅடையாளங்கள் பற்றி யாரிடமும் கூறவில்லை. தற்போது நீதிமன்றத்தில் நான் 2 வது எதிரியை ஏற்கனவே அடையாளம் பார்த்ததாகவும், 1வது எதிரியின் வீட்டின் பின்புறம் உள்ளதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவரை வீட்டில்பார்த்த பிறகு இங்குதான் பார்க்கிறேன் என்றால்சரிதான். இடைப்பட்ட காலத்தில்அவரை பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் என் வீட்டுக்காரர் இறந்த பிறகு வெளியில் போகவில்லை என்றால் சரிதான்.